## வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் - 2017

----------------------------------------------------------------------------

வீதி பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 5 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட (203 ஆம் அத்தியாயம்) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213 ''அ'' பிரிவு மற்றும் 237 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2005 ஏப்ரல் 04 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் 2018 மே 23 ஆந் திகதி விரிவான அறிக்கை தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

----------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

திறைசேரி உண்டியல் இலக்கம் 09 இல் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 6,944,578 ஆக இருந்த போதிலும், அது ரூபா 7,408,228 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 463,650 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மன்றம் வருமான வரிகளிலிருந்து விலக்களிக்கப்படாமையினால் மன்றத்தால் மீளாய்வாண்டின் போது உழைத்த ரூபா 62,775,604 தொகையான வருமானத்திற்கு வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கோ அல்லது வருமான வரிக்காக பதிவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | பிரமாணத்தின் பிரகாரம் எந்தவொரு பதவிநிலை உத்தியோகத்தருக்கும் வழங்கப்படுகின்ற உபகட்டு நிதியொன்று உரிய நோக்கங்கள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர், உடனடியாக முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டில் மன்றத்தினால் நிகழ்ச்சி திட்டங்களை நடாத்துவதற்கும் ஏனைய செலவினங்களுக்காகவும் வழங்கப்பட்ட ரூபா 179,813 தொகையான முற்பணங்கள் பணிமுடிவடைந்து 10 நாட்கள் தொடக்கம் 90 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2004 நவம்பர் 24 ஆந் திகதிய 1368/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பிரிவின் மாதிரிப் படிவ இலக்கம் 01 | மூன்றாம் தரப்பினர் காப்புறுதி பெறுமதி தொடர்பாக NCRS Form 01 படிவத்தில் தகவல்களை வழங்கும் போது மூன்றாம் தரப்பினர் காப்புறுதி பெறுமதியை இனங்காணக் கூடிய வகையில் தகவல்கள் காண்பிக்கப்படாமையினால் 03 நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அனுப்பப்பட்ட ரூபா 14,079,626 தொகையினது சரியான தன்மை தெடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மன்றத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 44,959,713 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 39,654,832 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போதுமீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,304,881 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவினம் ரூபா 4,502,383 இனால் அதிகரித்திருந்த போதிலும் காப்புறுதி வருமானப் பங்களிப்பு ரூபா 4,904,394 இனால் அதாவது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் என்பன ரூபா 4,902,871 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 03 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது நிறுவனத்தில் தொடர்ச்சியாக நிதி மிகை காணப்பட்டது. போதிலும் நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் மீள சீராக்கும் போது 2014 ஆம் ஆண்டில் ரூபா 28,736,208 தொகையான மன்றத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 47,426,273 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பாதீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 4.6 மில்லியன் தொகையான 03 நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான 02 நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றம் தாபிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- ஒவ்வொரு வருடமும் வீதி வலைப்பின்னலுக்கு புதிதாக சேர்க்கப்படுகின்ற வீதிகள் தொடர்பாகவும், மோட்டார் வாகனப் போக்குவரத்து எண்ணிக்கை, வீதி விபத்துக்கள், சொத்து இழப்புக்கள் மற்றும் தொடர்புடைய சகல தகவல்களையும் உள்ளடக்கிய கணனி தரவுக் களஞ்சியம் ஒன்றைப் பேணிச் செல்லல்.

- தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல், களப்பரிசோதனைகளை நடாத்துதல் மற்றும் நிதி உதவி வழங்குதல்.

- வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- வீதிப் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளுக்காக நிதி ரீதியான மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

- அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய பணிகள் தொடர்பாக இணைப்பை ஏற்படுத்துதல்.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கை என்பவற்றின் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(i) சட்டரீதியான நிதிஏற்பாட்டைத் தயாரித்தல்**

வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தை ஆணைக்குழுவாக நியமிப்பதற்கான சட்டரீதியான நிதிஏற்பாட்டை தயாரிப்பதற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 220,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தல், அமைச்சரவைக் குறிப்பை சமர்ப்பித்தல், ஆணைக்குழுவைத் தாபித்தல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பத்திரிகை விளம்பரத்தை பிரசுரித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ii) காப்புறுதி நிதியப் பங்களிப்பை அதிகரித்தல்**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் காப்புறுதி முகவர் நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற 01 சதவீதமான காப்புறுதி வருமானத்தை 02 சதவீதம் வரை அதிகரித்துக் கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) ஆராய்ச்சி மற்றும் மெய்மையாய்வு**

ஆராய்ச்சிற்கும் மெய்மையாய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் இடையே உயிரிழப்பு வாகன விபத்துக்களுக்கான காரணங்களை அனுப்புவதற்காக ஆராய்ச்சி மற்றும் மெய்மையாய்வை நடாத்துதல், அதற்காக நிறுவனங்களைத் தெரிவு செய்தல், மற்றும் அதன் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் இழப்புக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் 2017 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரதான பணிப்பொறுப்பொன்றாக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட உயிரிழப்பு வாகன விபத்துக்களின் எண்ணிக்கை முறையே 2590, 2824 ஆகவும் மற்றும் 2924 ஆகவும் சீராக அதிகரித்திருந்தது. ஆராய்ச்சி மற்றும் மெய்மையாய்வை நடாத்துவதற்கு மீளாய்வாண்டில் பாதீட்டில் ரூபா 500,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலம் அது ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(iv) வீதிப் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டத்தை அமுல்படுத்தல்**

பாதுகாப்பற்ற புகையிரத குறுக்கு வீதிகளைத் தெரியப்படுத்துவதற்காக 250 பெயர்ப்பலகைகளைப் பொருத்துவதற்கு ரூபா 04 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது பாதுகாப்பற்ற புகையிரத நிலையங்களை இனங்காணலோ அல்லது பதாகைகளைப் பொருத்துதலோ இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது புகையிரத குறுக்கு வீதிகளில் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | எண்ணிக்கை | காயம் | மரணம் |
|---|---|---|---|
| வாகனங்கள் புகையிரதத்துடன் மோதுதல் | 86 | 59 | 12 |
| வாகனப் குறுக்கு வீதிகளின் வாயிற் கதவுகளுடன் மோதுதல். | 439 | - | - |

**(v) பயிற்சி மற்றும் நிவாரணம்**

---

வீதி விபத்துக்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக நடாத்தப்படுகின்ற பயிற்சி மற்றும் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 03 பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 1,200,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(vi) ஊடக மற்றும் இலத்திரனியல் மேவுகை நடவடிக்கைகளை விரிவுபடுத்தி செயற்படுத்துதல்**

---

மன்றத்தால் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வீதிப் பாதுகாப்பு தொடர்பாக ஊடக மற்றும் இலத்திரனியல் மேவுகைகளுக்கான 06 செயற்பாடுகளுக்காக ரூபா 10,400,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் அந்த 06 செயற்பாடுகளுக்காகவும் ரூபா 4,100,829 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் நிதிசார் செயல்முன்னேற்றம் 39 சதவீதமாகும்.

**(vii) இணையதள வசதிகளுடன் நூலகமொன்றை நடாத்திச் செல்லல்**

---

மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தின் பிரதான பணியாக இணையதள வசதிகளுடன் நூலகமொன்றை நடாத்திச் செல்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், மன்றம் தாபிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நூலகமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2011 - 2020 வரையான காலப்பகுதிக்காக காண்பிக்கப்பட்ட பெயரிடப்பட்ட வீதிப் பாதுகாப்பு தசாப்தத்திற்கு இணையாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தால் 2011 மே 11 ஆந் திகதி நடைபெற்ற வீதிப் பாதுகாப்பு மாநாட்டின் போது கீழே குறிப்பிடப்படும் 05 விடயங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட உள்நாட்டுத் திட்டம் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(i) வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவ இயலளவை அதிகரித்தல்.

(ii) பாதுகாப்பு வீதி முறைமையொன்றை ஏற்படுத்துதல்

(iii) வாகனங்களின் தரத்தை மேம்படுத்துதல்.

(iv) வீதியைப் பயன்படுத்துவர்களின் ஒழுக்கங்களை ஏற்படுத்துதல்.

(v) விபத்தின் பின்னரான நலன்கள் (இனங்காணப்படாத வாகன விபத்துக்களுக்காக இழப்பீடு செலுத்தல் மற்றும் சர்வதேச இழப்பீட்டுத் தினத்தை கொண்டாடுதல்) திகதியை கொண்டு வருதல்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் விடயப்பொறுப்பு அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மிகைப்பணம் முதலீடு செய்யப்பட முடியும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது ஒவ்வொரு மாதமும் ரூபா 2.12 மில்லியன் அளவிலான மிகைப்பணத்தை முதலீடு செய்வதற்கான இயலுமை மன்றத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும் மன்றத்தின் நடைமுறைக் கணக்கில் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 43 மில்லியனில் ரூபா 40 மில்லியனை முதலீடு செய்வதற்காக 2017 மார்ச் 24 ஆந் திகதி மன்றப் பத்திர இலக்கம் 2017-06-07-02 இன் மூலம் தேசிய மன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் அப்பணத்தை முதலீடு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மன்றம் தவறியிருந்தது. அந்த மிகைப் பணத்திற்காக ஒரு வருட கால எல்லையில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை மற்றும் முதலீடு செய்யப்படாமை என்பவற்றால் 11 சதவீத சராசரி வருடாந்த வட்டி விதிதத்தின் கீழ் ரூபா 4.4 மில்லியன் வருமானமொன்றை மன்றம் இழந்திருந்தது.

(ஆ) தெற்காசிய வலயத்தில் காணப்படுகின்ற 10 நாடுகளில் ஆகக்கூடிய விபத்துக்களின் எண்ணிக்கை ஏற்படுகின்ற நாடுகளுக்கிடையில் 03 ஆவது இடத்தை இலங்கை உரித்தாக்கியிருந்ததுடன் (சனத்தொகை ஒரு இலட்சத்திற்கு 36.2 தாய்லாந்து, 20.3 மியன்மார், 17.4 இலங்கை) இந்த வருமானத்தைக் குறைப்பதற்காக எதிர்பார்த்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 இன் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 2.13.B பிரிவின் பிரகாரம் இனங்காணப்படாத வாகனங்களிலிருந்து விபத்திற்குட்பட்ட நபர்களுக்கு இழப்பீடு செலுத்துதல் மன்றத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் இனங்காணப்படாத வாகனங்களிலிருந்து ஏற்பட்ட 201 வீதி விபத்துக்களில் கிடைத்த இழப்பீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 88 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட 175 வீதி விபத்துக்களில் கிடைத்த இழப்பீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 48 ஆகக் காணப்பட்டது. இனங்காணப்படாத வாகனங்களிலிருந்து ஏற்படுகின்ற விபத்துக்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட செலவினத்தை 2016 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 4,793 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் இழப்பீட்டு விணணப்பங்கள் சமர்ப்பித்தலில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மன்றத்தால் வீதிகளைப் உபயோகித்தல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் (2016 தவிர) 2017 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்ட செலவினத்தில் படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்டது. எனினும், 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை உயிரிழப்பு மற்றும் கடுமையான வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 9,060 முதல் 11,068 வரை வருடாந்தம் படிப்படியாக அதிகரித்திருந்தது. மேலும் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை விபத்துக்களிலிருந்து உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,362 முதல் 3,101 வரை படிப்படியாக அதிகரித்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை இனங்காணப்படாத வாகனங்களிலிருந்து ஏற்பட்ட விபத்துக்களின் காரணமாக கிடைக்கப்பெற்ற ரூபா 4,900,000 பெறுமதியான 37 இழப்பீட்டு விண்ணப்பங்களுக்காக, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதி முதல் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு 01 வருடமும் 03 மாதங்களும் முதல் 03 வருடமும் 03 மாதங்களும் வரையான காலம் கடந்திருந்த போதிலும், இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் உயிரிழப்பு மற்றும் 48 காயமடைந்தவர்களுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 6,600,000 பெறுமதியான இழப்பீட்டு விண்ணப்பங்களுக்கிடையில் ஆண்டின் போது 02 உயிரிழப்பு விண்ணப்பங்களும் 03 காயமடைந்தவர்களுமாக 05 விண்ணப்பங்களுக்காக ரூபா 700,000 மாத்திரம் இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 10.4 சதவீத குறைந்த சதவீதமொன்று இழப்பீட்டாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் மன்றம் தாபிக்கப்பட்டு 20 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும், நிரந்தரப் பதவியணியொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருட ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்குரிய வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியிருந்தது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) மேற்கூறப்பட்ட பிரகாரம் 2030 ஆம் வருட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்துவதன் மூலம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தால் அதன் விடயப்பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்களான ஆரோக்கியமான மற்றும் சிறப்பான வாழ்வு என்பன இனங்காணப்பட்டிந்த போதிலும், அது தொடர்பான இலக்குகள், அடிப்படையாக் கொள்ளப்பட்ட தரவுகள், இலக்கை அடையக்கூடிய கட்டங்கள் போன்றவற்றின் செயல்முன்னேற்றத்தைக் கண்டறிவதற்கான குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எந்தவொரு பணியினதும் சரியான செயலாற்றலை அளவிடுவதற்காக சரியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நடாத்துதல் தேவையாக இருந்த போதிலும், நிறுவனத்தால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் அடைவினை அளவீடு செய்வதற்காக சரியான தரவுகளை மாத்திரம் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலைபேறான இலக்கை அடைத்துக் கொள்வதற்காக நிறுவனத்தால் இனங்காணப்பட்ட பணிகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சரியான தொடர்பொன்றை ஏற்படுத்தாமையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன் ஆயத்தங்களைச் செய்யும் செயற்பாடுகள் நலிவான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

---

2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்காக மன்றத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டில் நிதிஏற்பாடு வழங்கப்படாதிருக்கும் போது மீளாய்வாண்டில் மன்றத்தின் அங்கத்தவர் படியாக ரூபா 1,877,239 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 6.3 சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

---

பெருந் தெருக்களில் ஏற்படுகின்ற வாகன விபத்துக்களின் மூலம் உயிரிழப்புக்கள், ஆதனங்களில் இழப்புக்கள் என்பவற்றைப் போன்றே சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகியிருந்ததுடன் அந்த விபத்துக்களின் காரணமாக சமூகத்திற்குத் தேவையான நபர்கள் மற்றும் அவர்களின் சேவை இழக்கப்பட்டமையால் அவர்களுக்காக சமூகத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களின் அளவு உயர்வடைந்து சென்றதன் மூலம் அரசாங்கத்திற்கு செலவிட வேண்டிய கிரயம் உயர்வடைந்து சென்றதுடன் அது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதன் பிரகாரம் வீதி விபத்துக்களுக்கு புறம்பான சமுதாயமொன்றைத் தோற்றுவிக்கும் நோக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தின் 2017 ஆம் ஆண்டின் திட்டம் மற்றும் செயலாற்றல் தொடர்பான பரிசோதனையின் போது நிறுவனத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் போதியளவான பிரகாரம் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வருமானச் சேகரிப்பு | காப்புறுதி நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் சரியானது என உறுதிப்படுத்தப்படாமை. |
| (ஆ) | இழப்பீட்டுக் கொடுப்பனவு | தாமதமின்றி இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | திட்டமிடலும் பாதீட்டுக் கட்டுப்பாடும் | வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை |
| (ஈ) | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் | மன்றத்தால் கொள்வனவு செய்யப்பட்ட புறச் செயற்பாட்டு பிரக்சேபன இயந்திரம் மற்றும் பெகோ இயந்திரம் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்படாமை. |